அன்னார்களது மறைவால், அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு, ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்துமவகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதிகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

## 2. இரங்கல் தீர்மானங்கள்

### (அ) திரு. பி.வி. நரசிம்ம ராவ், முன்னாள் பாரதப் பிரதமர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கல் தீர்மானங்கள் கீழ்க்காணும் இரங்கல் தீர்மானங்களைப் பேரவைமுன் வைக்கிறேன்:

"சிறந்த தேசியவாதியும், இந்திய விடுதலைப் போராட்ட வீரரும், நமது பாரத நாட்டின் பிரதமராகப் பணியாற்றியவருமான திரு பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள், தமது 83 ஆவது அகவையில், 23-12-2004 அன்று மறைவுற்றது குறித்து, இப்பேரவை, பேரதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது."

மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள், பன்மொழி வித்தகர். எழுத்தாற்றல் மிக்கவர். சுதந்திர இந்தியாவின் புதிய பொருளாதாரச் சீர்திருத்தத்திற்கு வித்திட்டவர். அரசியல் அரங்கிலும், நிர்வாகத் துறையிலும் தனித் திறம்கொண்ட பேராற்றலாளர். அரசியலில் நவீன சாணக்கியர் என அனைவராலும் குறிப்பிடப்படும் அரசியல் வித்தகர். ஆந்திர மாநிலச் சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக, அமைச்சராக, அம்மாநிலத்தின் முதலமைச்சராகப் பணியாற்றியவர். நாடாளுமன்றத்தின் மக்களவைக்குத் தொடர்ந்து ஐந்து முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்திய அமைச்சராகப் பல்வேறு முக்கியத் துறைகளுக்குப் பொறுப்பு வகித்தவர். 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை, நமது நாட்டின் பிரதமராக அரும்பணியாற்றியவர், திரு. பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள்.

அவரது மறைவால் துயருற்று வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும் அவர் சார்ந்திருந்த இயக்கத்திற்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறது."

*முற்பகல் 10–05*

## (ஆ) பாரத ரத்னா திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி, வாய்ப் பாட்டு இசைக் கலைஞர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "கோடிக்கணக்கான மக்களின் இதயங்களைத் தனது கர்நாடக இசையின் மூலம் சொந்தமாக்கிக் கொண்டவரும், இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது பெற்றவருமான, கர்நாடக இசை அரசி, திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் 11–12–2004 அன்று மறைவுற்றது குறித்து இப்பேரவை தாங்கொணாத் துயரம் அடைகிறது.

மறைந்த திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் கர்நாடக இசையை உலகம் முழுவதும் பரப்பிய இசைக் குயில் ஆவார். இனிய குரல் வளமும், தெளிவான உச்சரிப்புத் திறனும் கொண்டவர். தான் பாடும் பாடல்களில் அவற்றைத் திருத்தமாக வெளிப்படுத்துகின்ற ஆற்றல் படைத்தவர். கருணை உள்ளம், அடக்கம், இனிமை இவை அனைத்திற்கும் உறைவிடமாகத் திகழ்ந்தவர். இசையையே தனது வாழ்க்கையாகக் கொண்டவர். அவரது குரல், அழகும், ஆன்மீகமும் ஒருங்கே இணைந்த குரல். கர்நாடக இசைபற்றி அறியாதவர்களைக்கூட தனது இனிய குரலால் மயங்க வைத்தவர். மதுரையில் பிறந்து தெய்வீக இசையின் உலகார்ந்த தன்மையால் புவி முழுமையும் தனது சொந்தமாக்கிக் கொண்டவர். தன்னுடைய இனிய கீதங்களினால் மகிழ்ச்சி, இறை பக்தி, தேசப்பற்று ஆகிய உணர்வுகளை உருவாக்கும் ஆற்றல் பெற்றவர். இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது மற்றும் மக்சாசே போன்ற பல்வேறு பெருமைக்குரிய விருதுகளைப் பெற்றவர். தனது வாழ்நாள் முழுவதும் இசைச் செல்வத்தை மட்டுமின்றி, தான் ஈட்டிய பொருட்செல்வத்தையும் வாரி வழங்கியவர். கர்நாடக இசையின் மதிப்பிட முடியாத மாணிக்கக் கல்லான திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களின் இழப்பு, ஈடு செய்ய முடியாதது. அவரது இடம் இன்னொருவரால் நிரப்ப இயலாதது. அவர் நம்மை விட்டு மறைந்தாலும், அவரது தெய்வீகக் குரல் நம்மை விட்டு மறையாது.